பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 01 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தமிழகத்தின் குலசேகரப்பட்டினத்தில் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிகள் இரண்டாண்டுகளில் நிறைவடையும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.
- கனடா நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது.
- தில்லி சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.
- பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் பக்தர்கள் புனித நீராடுவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது
- தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் மற்றும் சங்கர் சுப்பிரமணியன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<>>>>>**

இந்தியாவின் **nvs -02** செயற்கைக்கோள் ஜி எஸ் எல் வி —எப்-15 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதிஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து இன்று காலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது

இதன்மூலம், இஸ்ரோ தனது 100-வது ராக்கெட்டை விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ளது.

**nvs -02** செயற்கைக்கோள் பயண வழிகாட்டுதல், பாதுகாப்புத்துறை செயல்பாடுகளில் உதவிகரமாக இருக்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இன்று ஸ்ரீஹரிகோட்டாவில் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோ தலைவர் திரு நாராயணன், வரும் ஐந்தாண்டுகளில் மேலும் 100 செயற்கைக்கோள்களை செலுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிகள் இரண்டாண்டுகளில் நிறைவடையும் என்று அவர் கூறினார்.

மேலும், ககன்யான் திட்ட முன்னேற்பாடுகள் வேகமாக நடைபெற்றுவருவதாகவும், **NGLV,** சந்திரயான்-4, சந்திரயான் -5 திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு நாராயணன் குறிப்பிட்டார்.

100-வது ராக்கெட் ஏவும் நிகழ்வில் ஏராளமான பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

ராக்கெட் விண்ணில் பாய்ந்ததை நேரில் கண்டது தங்களை வியப்பில் ஆழ்த்தியதாக அவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மாணவர்கள் - 56 செகண்ட்ஸ்)*

**<<<<<>>>>>**

கனடா நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இக்குற்றச்சாட்டுகள் உண்மையற்றவை என்றும், இந்தியாவின் உள் விவகாரங்களில் கனடா தொடர்ந்து தலையிட்டு வருவதாகவும் கூறியுள்ளது.

இதுபோன்ற தலையீடுகளால் சட்ட விரோத குடியேற்றம், குற்றச்செயல்கள் போன்றவை அதிகரிக்கும் சூழல் உருவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சட்டவிரோத குடியேற்றத்திற்கு ஆதரவான செயல்பாடுகளை ஒருபோதும் ஏற்க முடியாது என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, **'Shahdara '** தொகுதியில் இன்று நடைபெறும் பேரணியில் பங்கேற்கிறார்.

பிஜேபி மூத்த தலைவரான திரு மனோகர் லால், ஆர் கே புரம் தொகுதியில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், பத்லி, திமர்பூர் தொகுதிகளில் இன்று வாக்கு சேகரிக்கிறார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, பவானா தொகுதியில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.
மேலும் அக்கட்சியின் தேர்தல் அறிக்கையை, மூத்த தலைவர்கள் திரு ஜெய்ராம் ரமேஷ், திரு தேவேந்தர் யாதவ் ஆகியோர் இன்று புதுதில்லியில் வெளியிடுகின்றனர்.

இதற்கிடையே, தமிழகத்தில், ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி, வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னங்கள் பொருத்தும் பணி இன்று தொடங்கியுள்ளது.
மூன்று நாட்களில் இப்பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

மானாவாரி வேளாண்மை தொடர்பான சர்வதேச கருத்தரங்கு ஹைதராபாதில் இன்று தொடங்கியது.

மத்திய வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித்துறை செயலாளர் டாக்டர் ஹிமான்ஷு பதக், இதனை தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>

குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற முப்படைகள் பாசறை திரும்பும் நிகழ்ச்சி இன்று மாலை புதுதில்லியில் நடைபெறுகிறது.

இதில், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இதையொட்டி, தில்லி விஜய்சவுக் பகுதியில், பிற்பகல் இரண்டு மணிமுதல், இரவு 9.30 மணிவரை பொது போக்குவரத்து நிறுத்தப்படும் என்று தில்லி காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் இன்று மவுனி அமாவாசையையொட்டி காலையில் மட்டும் 2 கோடியே 78 லட்சம் பேர் புனித நீராடியுள்ளனர்.

இந்நாளையொட்டி பிரயாக்ராஜில் ஏழு அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுவரை 22 கோடிக்கும் மேற்பட்டோர் அங்கு நீராடியுள்ளதாக உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

மௌனி அமாவாசையையொட்டி, மகா கும்பமேளாவில் பங்கேற்கும் பக்தர்கள் அருகில் உள்ள கங்கை நதிக்கரையில் புனித நீராடுமாறு அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இன்றைய தினத்தில் சுமார் 8 கோடிக்கும் மேற்பட்டோர் பிரயாக்ராஜில் உள்ளதாகவும், அனைவரும் திரிவேணி சங்கமத்தில் நீராடுவது என்பது கூட்ட நெரிசலை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரயாக்ராஜில் இன்று காலை கூட்ட நெரிசல் ஏற்பட்டதாக செய்திகள் வெளியான நிலையில், அவர் இந்த அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளார்.

நெரிசலில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவதாவும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளங்களில் வெளியாகும் வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்றும், பக்தர்கள் புனித நீராடுவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மகா கும்பமேளாவில் ஏற்பட்ட கூட்டநெரிசல் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் தம்மிடம் தொலைபேசி வாயிலாக தகவல் கேட்டறிந்ததாகவும் திரு யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

பிரயாக்ராஜில் தற்போது நிலைமை கட்டுக்குள் இருப்பதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

**<<<<>>>>>**

தை அமாவாசையையொட்டி தமிழகம் முழுவதும் மக்கள் புனித நீராடி தங்கள் முன்னோர்களை வழிபட்டு வருகின்றனர்.

இதையொட்டி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவள்ளூர் உட்பட பல்வேறு மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளில் மக்கள் புனித நீராடி தர்பணம் செய்து வழிபட்டு வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகாந்த் மற்றும் சங்கர் சுப்பிரமணியன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**Pathum Wan** –ல் இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், ஸ்ரீகாந்த் 21-13, 21-18, என்ற செட் கணக்கில் இஸ்ரேலின் டேனியலை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் சங்கர் சுப்பிரமணியன் 15-21, 21-15, 21-19 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **‘June Wei Cheam**-ஐ தோற்கடித்தார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை, 21-8, 21-16, என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் **‘Weeraphat – Sararat** இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

---------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - இங்கிலாந்தின் சார்லஸ் புரும் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------------

நெதர்லாந்து சர்வதேச செஸ் போட்டியில், உலக சாம்பியனான இந்தியாவின் குகேஷ் ஆறு புள்ளி ஐந்து புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

**Wijk Aan Zee**-ல் நேற்று நடைபெற்ற ஒன்பதாவது சுற்று ஆட்டத்தில் மற்றொரு இந்திய வீரரான லியோன் லூக்கை அவர் வென்றார்.

**<<<<<END>>>>>**